காணிக்கையாக்குகிறேன். 'இந்திய நாடு கிராமங்களில்தான் வாழ்கிறது' என்றார் காந்தியடிகள். மாண்புமிகு அம்மா அவர்களே, இன்றைக்குக் கிராமங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஒவ்வோர் அறிவிப்பாலும் மிளிர்கின்றன; மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்)*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளையெல்லாம் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். உடனடியாக அவற்றை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) அவற்றையெல்லாம் உடனே எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) எடுத்துக் கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இதையெல்லாம் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) இதுமாதிரி நீங்கள் பேசுவது முறையல்ல; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுமாதிரிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே நீங்கள் உட்கார்ந்து, நான் சொல்வதைக் கேளுங்கள். அதன் பிறகு நீங்கள் பேசலாம். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேட்கப் போகிறீர்களா அல்லது கேட்க மாட்டீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருவீர்களா அல்லது உட்கார மாட்டீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்)*

2013 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அறிவிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. (குறுக்கீடு) உங்கள் சம்பந்தமாக ஒரு விஷயம் அறிவிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) உங்களைப் பற்றிய ஒரு விஷயம் உள்ளது. (குறுக்கீடு) உங்களைப் பற்றிய ஒரு விஷயத்தைத்தான் அறிவிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நான் நிற்கிறேனல்லவா? (குறுக்கீடு) நான் நிற்கிறேனல்லவா? (குறுக்கீடு) பேரவைத் தலைவர் நான் நிற்கிறேன், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் உட்காருவீர்களா, மாட்டீர்களா? (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 120-ன்படி, ஓர் உறுப்பினர் ஒரு கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டால், அக்கூட்டத்தொடரின் மீத நாட்களில் நடக்க இருக்கும் கூட்டங்களில் பங்கேற்க இயலாது. ஆறாவது கூட்டத் தொடரில், அதாவது வரவு-செலவுக் கூட்டத் தொடரில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், 3 முறை வெளியேற்றப்பட்டுள்ளார்கள். நீங்கள் ஏற்கெனவே இரண்டு முறை வெளியேற்றப்பட்டுள்ளீர்கள்.

மேற்படி விதிகளின்படி, அவர்கள் வரவு-செலவுக் கூட்டத் தொடர் முழுவதும் பங்கேற்க இயலாது என்றிருந்தாலும், எதிர்க்கட்சிகள் தங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களின் பிரச்சினைகளைப் பேரவையில் பேசி, தங்கள் ஜனநாயகக் கடமைகளை முறைப்படி, முழுமையாக, நிறைவேற்ற வேண்டுமென்ற உயரிய எண்ணத்துடனும், பெருந்தன்மையுடனும் மற்றும் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்கின்ற ஒரே நோக்கோடும் செயல்படுகிற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கருத்துப்படி, தி.மு.க. உறுப்பினர்கள் பேரவை நிகழ்ச்சிகளில் பங்கேற்க அனுமதி அளித்துள்ளேன்.

இனிமேலும், இதுபோன்று பேரவைப் பணிகளுக்கு இடையூறு செய்யும் பணிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து, பேரவையின் கண்ணியத்தினையும், மாண்பினையும் காத்து, ஜனநாயக முறையில் தங்களது கடமைகளை ஆற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் வரவு-செலவுக் கூட்டத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் பங்கேற்க வாய்ப்பு அளித்துள்ளேன். இருப்பினும், தி.மு.க. உறுப்பினர்கள் அளிக்கப்பட்ட வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்துவது மிகவும் துரதிருஷ்டவசமானது. எனவே, இன்று அவைக்கு வருகை

தந்திருக்கும் தி.மு.க. உறுப்பினர்கள், எச்சரிக்கையுடன் செயல்படும்படி எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

இதற்கு மேலும் இவ்வாறு நடந்துகொண்டால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இதற்கு மேலும், நீங்கள் நின்று கொண்டிருந்தால், நான் உங்களை வெளியேற்ற வேண்டி வரும். (குறுக்கீடு) அவைக் காவலர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜெ. அன்பழகன் அவர்களையும், திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களையும் அவையைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவையின் நேரத்தை வீணடிக்கிறீர்கள். (குறுக்கீடு) அவையை நடத்தவிடாமல் குந்தகம் செய்கிறீர்கள். ஆகவேதான், உங்களை அவையைவிட்டு நீக்கி இருக்கிறேன். (குறுக்கீடு) அவைக் காவலர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவனஈர்ப்பு (குறுக்கீடு) அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)

(உறுப்பினர்கள் திரு. ஜெ. அன்பழகன் மற்றும் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

5. கவன ஈர்ப்பு

ஒட்டப்பிடாரம் தொகுதி, மாப்பிள்ளையூரணியில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, மாப்பிள்ளையூரணி ஊராட்சி மற்றும் பல ஊராட்சிகளில்